ලු
லைபேசி
..lephones
011-2136600
011-2136650

ලේකම්
செயலாளர்
Secretary
011-2136602

ෆැක්ස්
தொலைநகல்
Fax
011 - 2876169
011 - 2876181

විද්‍යුත් තැපැල
மின் - அஞ்சல்
E - mail
info@psc.gov.lk

වෙබ් අඩවිය
இணையத்தளம்
Website
www.psc.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No.
PSC/APP/4/28/2019

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

රාජ්‍ය සේවා කොමිෂන් සභා කාර්යාලය
**அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்**
**OFFICE OF THE PUBLIC SERVICE COMMISSION**

2020 ஜனவரி மாதம் .08. ஆம் திகதி

අංක 1200/9, රජමල්වත්ත පාර, බත්තරමුල්ල
இல. 1200/9, இரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை.
**No. 1200/9, Rajamalwatta Road, Battaramulla**

அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2020

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்.

**வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கு சலுகைக் காலத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் கோிக்கைகள்.**

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்காக சலுகைக் காலத்தினைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் போது பின்வரும் விடயங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்குமாறு தங்களை அறிவூட்டும் படி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதை அதன் பணிப்பின் பேரில் தயவுடன் அறியத்தருகின்றேன்.

I. வினைத்திறன்காண் தடைதாண்டல் தேவைப்பாட்டை பூர்த்திசெய்தவுடன் நிர்வாக அதிகாரிக்கு வினைத்திறன்காண் தடைதாண்டலுக்கான சலுகைக் காலம் தொடர்பில் கோரிக்கைகளை சமர்ப்பிக்க வேண்டியது ஏற்புடைய உத்தியோகத்தரின் பொறுப்பாதல் வேண்டும்.

II. அதற்கிணங்க, வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான சலுகைக் காலம் கடந்த காலத்தை அளாவியதாக வழங்கப்படுவதனால் அவ்வாறு கடந்த காலத்தில் இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் நிகழ்காலத்தில் நடவடிக்கை எடுக்க முடியாத காரணத்தினாலும் கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றுக்கு பாதிப்பற்ற வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதனாலும் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான சலுகைக் காலத்தினைப் பெற்றுக்கொண்டதன் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இழக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

(அ) சலுகைக் காலத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர், அந்தக் காலத்திற்கு ஏற்புடைய சம்பள ஏற்றம் பின்போடல் காரணமாக வேறு சேவைகளுக்கு நுழைவதற்கு அல்லது பதவி உயர்வுக்கான போட்டிப் பரீட்சைகளுக்கு / நேர்முகப் பரீட்சைகளுக்கு அல்லது அவ்வாறான ஏதேனும் தெரிவுக்கான சந்தர்ப்பமொன்றுக்கு தோற்றுவதற்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டது தொடர்பில் நிவாரணம் கோரி சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள் (வெற்றிடங்களைக் கருத்திற்கொள்ளாது வழங்கப்படும் தரம் அடிப்படையிலான பதவி உயர்வுகள் தவிர்ந்த)

(ஆ) சலுகைக் காலத்தினைப் பெற்றுக்கொள்ள முன்னர், அக்காலப் பிரிவுக்கு ஏற்புடையதாக நிகழ்ந்த சம்பள ஏற்றம் பின்போடல் காரணமாக இழக்கப்பட்ட பதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிவாரணம் கோரி சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

(இ)சலுகைக் காலத்தினைப் பெற்றுக்கொள்ள முன்னர், அக்காலப் பிரிவுக்கு ஏற்புடையதாக நிகழ்ந்த சம்பள ஏற்றப் பின்போடலை அடையாளம் காணாது அல்லது கவனிக்காது பிழையான முறையில் பதவி உயர்வுகள் அல்லது வேறு போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றி அவற்றில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சையின் போது அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் சம்பள ஏற்றம் பின்போடல் கண்டறியப்படுமிடத்து அல்லது கருத்திற்கொள்ளப்படுமிடத்து அதன் பிரகாரம் ஏற்புடைய பதவி உயர்வு அல்லது பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் செய்யப்படும் நியமனம் அல்லது வரப்பிரசாதங்கள் வழங்கப்படாத உத்தியோகத்தர்களினால் அவ்வாறு வழங்கப்படாத நியமனம் மற்றும் வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் மேன்முறையீடுகள்.

III. சேவைப் பிரமாணக் குறிப்பு அல்லது ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு அமைய உரிய காலப் பிரிவுக்குள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துவதற்கு அனைத்து நிர்வாக அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தோடு, உரிய காலத்திற்குள் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளை பூரணப்படுத்த வேண்டியது அனைத்து உத்தியோகத்தர்களினதும் பொறுப்பாதலும் வேண்டும்.

02. அதற்கிணங்க, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல 02/2011 & 02/2011(I) இல் காணப்படும் நிலமைகளின் கீழ் மாத்திரம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளுக்கான நிவாரணங்களைக் கோருவதற்கு உத்தியோகத்தர்களுக்கு சந்தர்ப்பம் உள்ளது என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு.